# குருவி



குருவி ஒன்று கூடுகட்டி முட்டையிட்டது.
அருகில் ஒரு பாம்பு புற்றில் பார்த்திருந்தது.
ஆடிப்பாடி நாளும் குருவி அடையும் காத்தது.
பாம்பு அதன் முட்டை யுண்ணச் சமயம் பார்த்தது.
குருவி ஒருநாள் உணவு தேடி வெளியே சென்றது .
அரவு மெல்ல குருவிக்கூட்டுள் நுழையப் போனது
காகம் ஒன்று பார்த்தே இதைக் ''காகா'' என்றது
கிளிகள் இதைக் கேட்டெழுந்து ''கீகீ'' என்றன
மைனாக் கூட்டம் ''ஆபத்'' தென்று மொய்த்துக் கத்தின
கரிக் குருவி, காடை, கோட்டான் திரண் டெழுந்தன !
வட்டம் இட்ட பருந்தும் கீழே விரைந்து வந்து

தன் துட்ட குணத்தை விட்டிவைக்குத் துணையாய் நின்றது
அத்தனையும் சேர்ந்து பாம்பைக் கொத்தத் தொடங்கின

''ஐயோ'' என்று பாம்பு கீழே செத்து விழுந்தது !

ஒன்று கூடி பறவையினம் பகையை வென்றது

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்று பாடின.

மு. பொன்னம்பலம்